ISSN : 2456-821X **அவையம் 2 (1)** 2018 P.No. : 42-58




# அற இலக்கியங்களில் ஆய்தம்

***முனைவர் ம.சரளாதேவி,***
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018** **ஏற்கப்பட்டது : 03.05.2018**

*தொல்காப்பியர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆய்த எழுத்து அற இலக்கியங்களில் எப்படி மாற்றம் அடைந்துள்ளது என்பதை எடுத்துரைக்கும் நோக்கில் நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய 11 அறநூல்களில் இடம்பெற்றுள்ள ஆய்த எழுத்து எந்தெந்த இடங்களில், எந்த சொற்களைக் கொண்டு, எப்பொருள்களில் வருகின்றன என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.*

## ஆய்தம் - விளக்கம்

*ஆய்தம் என்பது தமிழ்ச்சொல்லா? வடமொழியா என்பதில் பலரிடையே கருத்து முரண்பாடு இருந்து வந்தது. "ஆஸ்ரதம் என்ற வடசொல் தான் தமிழில் ஆய்தம் ஆயிற்றெனப் பலர் கருதினர். இக்கருத்தினை மறுத்து ஆய்தல் என்ற தமிழிச் சொல்லடியாகப் பிறந்த*

புதிய அவையம்

நுண்ணொலி எனப்பொருள் தரும் ஆய்தம் தமிழே எனப் பேராசிரியர் க.வெள்ளைவாரணர் விளக்கினர்." (சோ.நா.கந்தசாமி, தமிழிலக்கணச் செல்வம், ப.ப.35)

ஆய்தம் என்பது பெயர்ச்சொல். ஆய்தல் என்பது வினைச்சொல். ஆய்வுரை நுணுகிப் பார்ப்பது. ஆய்தல் என்னும் உரிச்சொல் இருப்பதை நுட்பமாக்கிக் காட்டும் எனத் தொல்காப்பியம் (சொல்.813) குறிப்பிடுகின்றது.

இதனால் ஆய்தம் என்னும் சொல் ஒலியை நுண்மையாக்கி அதாவது மென்மையாக்கிக் காட்டுவது என்னும் பொருள்பட நிற்பதைக் காணமுடிகிறது. இதன்மூலம் ஆய்தம் தமிழ்ச்சொல்தான் என்ற முடிவிற்கு வரமுடிகின்றது.

**ஆய்தத்தின் பெயர்கள்**

ஆய்த எழுத்தினைப் பலர் பல பெயர்களில் வழங்கியுள்ளனர். தொல்காப்பியரும், நன்னூலாரும் ஆய்த எழுத்தினைச் சார்பெழுத்தின் வகைகளுள் ஒன்றாகக் கூறுகின்றனர். அஃகான் என்று ஆய்தத்தினை அழைப்பர். தொல்காப்பியரும் அவ்வாறே வழங்குகின்றார். ஆனால் நன்னூல் அஃகேனம் என்பதுடன், தனிநிலை என்றும் குறிப்பிடுகின்றது. வீரசோழியமும் நேமிநாதமும் ஆய்தத்தினை முதலெழுத்தெனக் கூறுகின்றன. யாப்பபெருங்கள விருத்தி ஆய்த எழுத்தினைக் குறிப்பதற்கு ஐந்து பெயர்களைக் கூறியுள்ளது. 1.அக்கேணம், 2.ஆய்தம், 3.தனிநிலை, 4.புள்ளி, 5.ஒற்;று என்பனவாகும்.

**"அக்கேணம் ஆய்தம் தனிநிலை புள்ளி**

**ஒற்றிப் பாலைந்தும் இதற்கே" (யா.வி.ப.20)**

அஃகேனம், தனநிலை, புள்ளி, ஒற்று, முப்பாற்புள்ளி, முப்புள்ளி என்பதை ஆய்த எழுத்து என்று அழைக்கின்றோம்.

***பிறப்பிடம்***

ஆய்தத்தின் பிறப்பு குறித்து இலக்கண ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. இளம்பூரணர், பவணந்தியார் ஆய்தத்தின் பிறப்பிடம் தலை என்றனர். நச்சினார்க்கினியர்

ஆய்தத்தின் பிறப்பிடம் நெஞ்சு என்றார். மிடற்றில் பிறக்கும் என்றும் எண்ணியோரும் உண்டு. தொல்காப்பியர் தலை, நெஞ்சு போன்ற பேச்சுறுப்புக்களைக் கூறியுள்ளார். ஆனால் ஆய்தம் எங்கு பிறக்கும் என்று தெளிவாக எடுத்துரைக்கவில்லை. பவணந்தியாரோ ஆய்தம் குறித்துக் குறிப்பிடும்பொழுது

***"ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி" (நன்.எழுத்து.87)***

ஆய்த எழுத்திற்குப் பிறப்பிடம் தலை என்றும், முயற்சி வாயைத் திறத்தல் என்றும் கூறியுள்ளார்.

*"ஃ இது கடையண்ண உரசொலியன். இதுவும் ஒரே ஒரு மாற்றொலியை மட்டுமே கொண்டுள்ளது. ஆய்தம் மிக அருகியே இன்றைய தமிழில் காணப்படுகின்றது. அஃது, இஃது, எஃகு போன்ற ஒரு சில சொற்களிலேயே வருகின்றது. அஃது, இஃது என்பவற்றுடன் அது, இது ஆகியவையும் இப்பொருள்களைக் குறிக்கின்றன. ஆய்தத்துடன் கூடியவை மிக மிக அருகி ஒரு சிலரால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. இது குற்றெழுத்தை (உயிர்) ஒட்டி வெடிப்பொலியன் முன்னால் வரும்." (ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், ப.49, 54-55)*

எனவே ஆய்தம் என்பது தலையில் பிறந்து கடையண்ண உரசொலியாக வெளிப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

ஆய்தம் எங்கு தோன்றும் என்பது குறித்துத் தொல்காப்பியமும் நன்னூலும் குறிப்பிடும்பொழுது,

***"குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி***
***உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" (தொல்.எழுத்து.38)***

குற்றெழுத்தின் பின்வரும் ஆய்தப்புள்ளி ஆறு வல்லெழுத்துகளின் மேல் உயிரெழுத்தோடு வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

***"குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி***

பதிப்பு இணையம்

***உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைந்தே" (நன்.எழுத்து.90)***

மூன்று புள்ளி வடிவினையுடைய ஆய்த எழுத்து, குற்றெழுத்தின் முன்னர், உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறினுள் ஒன்றன் மேலதாய் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

இதன் அடிப்படையிலேயே திருக்குறள் - 49 இடங்களிலும், நாலடியார் - 10 இடங்களிலும், நான்மணிக்கடிகை – ஆய்தம் இடம்பெறவில்லை, இன்னா நாற்பது – ஆய்தம் இடம்பெறவில்லை, இனியவை நாற்பது – ஆய்தம் இடம்பெறவில்லை, திரிகடுகம் - 2 இடங்களிலும், ஆசாரக்கோவை – 2 இடங்களிலும், பழமொழி – 29 இடங்களிலும், சிறுபஞ்சமூலம் - 1 இடத்திலும், முதுமொழிக்காஞ்சி – ஆய்தம் இடம்பெறவில்லை, ஏலாதி – 2 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"ஆய்தம் என்பது ஃ என்னும் ஒன்றே. இது குறிலுக்கும் வல்லின உயிர்மெய்க்கும் இடையிலே வரும். மெய்யெழுத்துப்போல் எவ்வுயிரொடும் சேராது தனித்தே நிற்கும்.(சு.கு.அருணாசலம், கல்லூரித் தமிழிலக்கணத் தெளிவு, ப.2)

இலக்கண நூல்கள் குறிப்பிடும் பிறப்பிடங்களை அடிப்படையாகக் கொண்டே அறநூல்களிலும் ஆய்த எழுத்து வெளிப்படுகின்றது. ஆனால் குறிலை அடுத்து எனும்பொழுது பெரும்பான்மை அகரத்தை அடுத்தே அறநூல்களில் ஆய்தம் வருகின்றது. ஆறு வல்லின எழுத்துகளுக்கும் முன்னர் வராமல் க, கா, கி, கு, சா, த, தா, தி, து, தூ, தெ, தே, தொ ஆகிய எழுத்துகளுக்கு முன்னர் மட்டுமே ஆய்தம் வருவதைக் காணமுடிகின்றது.

**வடிவம்**

தமிழ்மொழி முதலில் பேச்சுமொழியாகத் தோன்றி பின்னர் எழுத்து மொழியாக வளர்ச்சி பெற்றது. ஒலிவடிவ எழுத்து தோன்றிய பின்புதான் வரிவடிவ எழுத்து தோன்றியது. உயிரெழுத்தும் ஆகாது, மெய்யெழுத்தும் ஆகாது, உயிர்மெய் எழுத்தும் ஆகாது தனித்த தன்மை பெற்று விளங்குவது ஆய்த எழுத்து. தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்து மட்டுமே மூன்று

பதிப்பு ஐயைவைப்

புள்ளிகள் உடைய எழுத்தாகத் திகழ்கின்றது, அதனால் முப்புள்ளி, முப்பாற்புள்ளி என்ற பெயர்களைப் பெற்றுள்ளது.

**"அவைதாம்**

**குற்றியலிகரம் குற்றியலுகரம்**

**ஆய்தம் என்ற**

**முப்பாற் புள்ளியும் எழுத்து ஓரன்ன"*(தொல்.எழுத்து.2)***

தொல்காப்பியரும் ஆய்தத்தினை முப்பாற்புள்ளி என்று குறிப்பிட்டுள்ளதன் மூலம் மூன்று புள்ளி வடிவுடையது என்பதை அறியலாம். ஓசையின் அடிப்படையில் அஃகேனம் எனப் பெயர் பெற்றுள்ளது. வழக்கில் ஆய்த எழுத்து என்றே கூறுவர். ஆயுத எழுத்து என்று கூறுவது தவறானதாகும்.

தொல்காப்பியர் மூன்று வகைச் சார்பெழுத்துகளில் ஒன்றாக ஆய்த எழுத்தைக் குறிப்பிட்டுள்ளார். நன்னூல் பத்துவகைச் சார்பெழுத்துகளில் ஒன்றாக ஆய்த எழுத்தைக் குறிப்பிட்டுள்ளது.

**"ஏதேனு மோர்குற் றெழுத்தின் முன்னும்**

**உயிரே றியவல் றெழுத்தின் பின்னும்**

**ஆய்தப் புள்ளி யெழுத்து வருமே " *(மா.த.இ.எழுத்து.21)***

ஆய்தம் என்பது மூன்று புள்ளி வடிவமுடையது. ஃ இதுதான் அதன் வடிவம். இவ்வெழுத்து முதலிலும் இறுதியிலும் வராது. ஒரு மொழியின் இடையில் தான் வரும். ஒரு குற்றெழுத்தின் முன்னும் உயிரேறிய வல்லெழுத்தின் பின்னும் ஆக நடுவில் நிற்கும். *(சங்குப் புலவர், மாணவர் தமிழிலக்கணம், ப.8)*

"இருசொற்கள் புணருகையில் கல் தீது போன்ற விடங்களில் கஃறீது என வருதலும் உண்டு. பெரும்பான்மையும் இற்றை நிலையில் ஆய்த எழுத்தைப் பயில்வது அருகி வருகின்றது. கேடயம் என்னும் பண்டைப் போர்க்கருவியில் மூன்று ஆணிப்புள்ளிகள்



பதிப்பு இணையம்

*தெளிவாகத் தெரிவதுண்டு. அக்கருவியினை ஆய்தம் என்றழைப்பர். அந்த கேடயத்திலுள்ள மூன்று புள்ளிகளையொத் திருப்பதால் இதனையும் ஆய்தம் என்பர்.” (ரம்போலாமாஸ்கரேனஸ், நல்ல தமிழ் எழுதுங்கள், பக்.15-16)*

காதால் கேட்டு அறிவது ஒலிவடிவ எழுத்தாகும். கண்களால் கண்டு அறிவது வரிவடிவ எழுத்தாகும். அத்தகைய நிலையில் கண்களால் கண்டு அறியும் பொழுது முப்பாற் புள்ளியாகவும், கேடயமாகவும், அடுப்பு போன்றும் காட்சி அளிப்பது ஆய்த எழுத்தாகும்.

**ஆய்தம் இடம்பெறும் சொற்கள்**

ஆய்தம் எல்லாச் சொற்களிலும் வருவதில்லை. இதனை இலக்கண நூல்கள் வரையறுத்துக் கூறியுள்ளன. அதன் அடிப்படையில் ஆய்த எழுத்துகள் வரும் இடங்களை நாஞ்சில் நாடன் தமிழ் லெக்சிகனை வைத்து வரிசைப்படுத்தியுள்ளார்.

1. அஃகடி – அக்கடி, துன்பம்
2. அஃகம் - தானியம், நீரூற்று, முறைமை
3. அஃகு – தகுதி, ஊறுநீர்
4. அஃகரம் - வெள்ளெருக்கு
5. அஃகான் - அகரம்
6. அஃகுதல் - அளவில் குறுகுதல், சுருங்குதல், மனம் குன்றுதல், நுண்ணிதாதல், கழிந்து போதல், குவிதல்-ஆம்பல் அஃகுதலும்
7. அஃகுவஃகெனல் - அஃகு அஃகு எனல்
8. அஃகுல்லி – உக்காரி எனும் சிற்றுண்டி (பிங்கல நிகண்டு)
9. அஃகேனம் - ஃஆய்த எழுத்து
10. அஃதான்று – டீநளனைநள
11. அஃது – அது
12. அஃதே – அப்படியே

பதிப்பு அவை

13. அஃதை – சோழன் ஒருவனின் மகள்

14. அஃபோதம் - சகோலப் பறவை (பிங்கல நிகண்டு)

15. அஃறிணை – அல்திணை

16. இஃது - இது

17. எஃகம் - எஃகு, எஃகாயுதம், வாள், வேல், சக்கரம், பிண்டி பாலம், சூலம்

18. எஃகுதல் - பன்னுதல், எஃகின பஞ்சு போல, அராய்தல், எட்டுதல், அவனை எஃகிப் பிடி, நெகிழ்தல், அவிழ்தல், வளைவு நிமிர்தல், ஏறுதல்

19. எஃகு - கூர்மை, மதிநுட்பம், உருக்கு, ஆயுதம், வேல்

20. எஃகு கோல் - பஞ்சு அடிக்கும் வில்

21. எஃகு செவி – நுனித்து அறியும் செவி

22. எஃகு படுதல் - இளகின நிலை அடைதல்

23. எஃகுறுதல் - அறுக்கப்படுதல், பன்னப்படுதல்

24. ஒஃகுதல் - பின் வாங்குதல்

25. காஃசு – ¼ பலம்

26. கஃறெனல் - கறுத்துள்ளமை காட்டும் குறிப்பு

27. சஃகுல்லி – சிற்றுண்டி வகை (பிங்கலம்)

28. சிஃகுவீகம் - நாக்கை உள்ளே இழுக்கும் ஜன்னி

29. சுஃறெனல் - ஒலிக்குறிப்பு

30. சுஃஃறெனல்

31. சுஃறு

32. பஃதி – பகுதி

33. பஃது – பத்து

34. பஃபத்து – பத்துப்பத்து



பதிப்பு இணையம்

*35. பஃறி – படகு, மரக்கலம், ரேவதி நட்சத்திரம்*

*36. பஃறியர் - நெங்தல் நில மக்கள் (சூடாமணி நிகண்டு)*

*37. பஃறுளி – பல் துளி – பஃறுளி ஆறு*

*38. பஃறொடை – பாவினம்*

*39. பஃறொடை வெண்பா – நாலடிக்கு அதிகமான வெண்பா*

*40. மஃகான் - மகர ஒற்று*

*41. வெஃகு – பேராசை*

*42. வெஃகல் - பேராசை*

*43. வெஃகா – வேகவதி நதி, திருமால் திருப்பதி*

*44. வெஃகாமை – அவாவின்மை, பிறர் பொருளை வெளவக் கருதாமை, வெறுப்பு*

*45. வெஃகுதல் - மிக விரும்புதல், பிறர் பொருளை இச்சித்தல்" (நாஞ்சில் நாடன், அஃகம் சுருக்கேல், தமிழும் நயமும்- கருத்துக்களம்)*

*நாஞ்சில் நாடன் குறிப்பிட்டுள்ள 45 சொற்களில் பல இடம்பெறாமலும், வேறுசில சொற்கள் இடம்பெற்றும் அற இலக்கியங்கள் அமைந்துள்ளன. இலக்கண நூல்களான தொல்காப்பியமும் நன்னூலும் குறிலை அடுத்து கு,சு,டு,து,பு,று என்ற ஆறு வல்லின எழுத்துகளுக்கு முன்னர் ஆய்தம் வரும் என்று குறிப்பிட்டுள்ள போதிலும் அற நூல்களில் ஆறு வல்லின எழுத்துகளுக்கு முன்னரும் ஆய்தம் பயன்படுத்தப்படவில்லை. சில குறிப்பிட்ட எழுத்துகளுக்குப்பின்னரும், சில குறிப்பிட்ட எழுத்துகளுக்கு முன்னரும் மட்டுமே ஆய்தம் வருகின்றது. அவற்றை விளக்கும் வகையில் பின்வரும் பகுதி அமைகின்றது.*

***ககரத்திற்கு முன் ஆய்தம்***

*குறிலை அடுத்தும் வல்லின எழுத்தான ககரத்தின் முன்னும் ஆய்தம் தோன்றும் பொழுது க, கா, கி, கு இவற்றை அடிப்டையாகக் கொண்டு மட்டுமே அறநூல்கள் ஆய்தத்தை வெளிப்படுத்துகின்றன.*

**திருக்குறள்**

*திருக்குறள் க, கா, கி, கு இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*

***எஃகதனிற்** கூரியது இல்" (குறள்.759)*

*"**அஃகாமை** செல்வத்திற்கு யாதெனின் **வெஃகாமை***

*வேண்டும் பிறன்கைப்பொருள்" (குறள்.178)*

*"சிற்றின்பம் **வெஃகி** அறனல்ல செய்யாரே*

*மற்றின்பம் வேண்டு பவர்" (குறள்.173)*

*"பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்*

*ஊராண்மை மற்றதன் **எஃகு**" (குறள்.773)*

*எஃகதனிற் - ஈட்டி (கூர்மை), அஃகாமை – அழியாமை, வெஃகாமை – கவர நினைக்காமை, வெஃகி – விலகி, எஃகு - கூர்மை போன்ற பொருள்களில் ஆய்தத்தைத் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.*

***நாடியார்***

*நாலடியார் க, கி, கு இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்*

*கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை – நனிபெரிதும்*

*வேல்கண்ணள் என்றிவளை **வெஃகன்மின்** மற்றிவளும்*

*கோல்கண்ண ளாகும் குனிந்து" (நாலடி.17)*

*"நட்புநார் அற்றன நல்லாரும் **அஃகினார்***

*அற்புத் தளையும் அவிழ்ந்தன – உட்சாணாய்*

*வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம்? வந்ததே*



பதிப்பு தமிழ்வையம்

*ஆழ்கலத் தன்ன கலி" (நாலடி.12)*

*"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்*

*இகலிலர் **எஃகுடையார்** தம்முள் குழீஇ*

*நகலின் இனதாயின் காண்பாம் அகல்வானத்து*

*உம்ப ருறைவார் பதி" (நாலடி.137)*

*வெஃகன்மின் - விரும்ப வேண்டா, அஃகினார் - கைவிட்டார், எஃகுடையார் - கூர்த்த அறிவுடையார் போன்ற பொருள்களில் ஆய்தத்தை நாலடியார் கையாண்டுள்ளது.*

**நான்மணிக்கடிகை**

*நான்மணிக்கடிகை க, கு இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"கற்ப கழிமடம் **அஃகும்** மடம் **அஃக***

*புற்கம் தீர்ந்து இவ் உலகில் கோள் உணரும்: கோள் உணர்ந்தால்*

*தத்துவம் ஆனநெறி படரும்: அந்நெறியே*

*இப்பால் உலகத்து இசை நிறீஇ உப்பால்*

*உயர்ந்த உலகம் புகும்" (நான்மணி.28)*

*அஃகும் - குறையப்பெறுவான், அஃக – குறைவதால் ஆகிய பொருள்களில் நான்மணிக்கடிகை ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.*

**திரிகடுகம்**

*திரிகடுகம் கி, கு இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"தன்னை வியந்து தருக்கலும் தாழ்வு இன்றிக்*

*கொன்னே வெகுளி பெருக்கலும் முன்னிய*

*பல் பொருள் **வெஃகும்** சிறுமையும் இம்மூன்றும்*



பதிப்பு இணையம்

*செல்வம் உடைக்கும் படை" (திரி.38)*

*"கொள் பொருள் **வெஃகிக்** குடி அலைக்கும் வேந்தனும்*

*உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்*

*இல் இருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்*

*வல்லே மழை அருக்கும் கோள்" (திரி.50)*

*வெஃகும் - விரும்புகின்ற, வெஃகி – விரும்பி என்ற பொருள்களில் திரிகடுகம் ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.*

***பழமொழி நானூறு***

*பழமொழி நானூறு கி – யை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"பெரு மலை நாட பிறர் அறியலாகா*

*அரு மறையை ஆன்றோரே காப்பர் அரு மறையை*

*நெஞ்சில் சிறியார்க்கு உரைத்தல், பனையின்மேல்*

*பஞ்சி வைத்தது **எஃகிவிட்டற்று** "( பழ.நா.91)*

*எஃகிவிட்டற்று – கொட்டினார்போல என்ற பொருளில் பழமொழி நானூறு ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.*

***ஏலாதி***

*ஏலாதி க, கா, கு இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"**அஃகு** நீ, செய்யல் என அறிந்த ஆராய்ந்தும்*

*__வெஃகல்__ வெகுடலே, தீக் காட்சி, **வெஃகுமான்***

*கள்ளத்த அல்ல கருதின், இவை மூன்றும்*

*உள்ளத்த ஆக உணர்" (ஏலா.27)*



பதிப்பு ஔவையம்

*"இழுக்கான் இயல் நெறி இன்னாத **வெஃகான்***

*வழுக்கான் மனை பொருள் வெளவான் ஒழுக்கத்தால்*

*செல்வான் செயிர் இல் ஊண் ஈவான் அரசு ஆண்டு*

*வெல்வான் விடுப்பான் விரைந்து" (ஏலா.45)*

*அஃகு – அது, வெஃகல் - விரும்பும், வெஃகுமான் - விரும்புதல், வெஃகான் -விரும்பாதவன் ஆகிய பொருள்களில் ஏலாதி ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.*

***சகரத்தின் முன் ஆய்தம்***

*குறிலை அடுத்தும் வல்லின எழுத்தான சகரத்தின் முன்னும் ஆய்தம் தோன்றும் பொழுது சா என்ற ஒரு எழுத்திற்கு முன்னர் மட்டுமே திருக்குறள் ஆய்தத்தை வெளிப்படுத்தியுள்ளது.*

*"தொடிப்புழுதி **கஃசா** உணக்கின் பிடித்தெருவும்*

*வேண்டாது சாலப் படும்" (குறள்.1037)*

*காஃசா – கால்பங்கு காஃசு என்பதும் கால் பகுதியைக் குறிக்கிறது.*

***தகரத்தின் முன் ஆய்தம்***

*குறிலை அடுத்தும் வல்லின எழுத்தான தகரத்தின் முன்னும் ஆய்தம் தோன்றும் பொழுது த, தா, தி, து, தூ, தெ, தே, தொ ஆகிய எழுத்துகளுக்கு முன்னர் மட்டுமே அறநூல்கள் ஆய்தத்தை வெளிப்படுத்துகின்றன.*

***திருக்குறள்***

*திருக்குறள் த, தா, தி, து, தே, தொ, தோ இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"நோதல் எவன்மற்று நொந்தாரென்று **அஃதறியும்***

*காதலர் இல்லா வழி" (குறள்.1308)*

*"தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி*

***அஃதாண்டு** அவள்செய் தது" (குறள்.1279)*



பதிப்பகம் ஐயம்

*"அன்பின் வழியது உயிர்நிலை **அஃதிலார்க்கு***

*என்புதோல் போர்த்த உடம்பு" (குறள்.80)*

*"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை **அஃதும்***

*பிறன்பழிப்பது இல்லாயின் நன்று" (குறள்.49)*

*"நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்*

*தேரினும் **அஃதே** துணை" (குறள்.242)*

*"இடுக்கண் வருங்கால் நகுக அதனை*

*அடுத்தூர்வது **அஃதொப்பது** இல்" (குறள்.621)*

*"மறைப்பேன்மன் **யானிஃதோ** நோயை இறைப்பவர்க்கு*

*ஊற்றுநீர் போல மிகும்" (குறள்.1161)*

*அஃதறியும் - தன்மையறியும், அஃதாண்டு – காதலனைத் தேடிச் சென்றது, அஃதும் - அதிலும், அப்படியே, அஃதே – அதுவே, அஃதொப்பது – மேலும் துன்பமானவையாக, அதை ஒத்திருத்தல், யானிஃதோ - இது போன்ற பொருள்களில் திருக்குறள் ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.*

***நாடியார்***

*நாலடியார் த, தா, து, தூ, தெ இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.*

*"மதித்திறப் பாரும் இறக்க மதியா*

*மிதிப்திறப் பாரும் இறக்க – மிதித்தேறி*

*ஈயும் தலைமேல் இருத்தலால் **அஃதறிவார்***

*காயும் கதமின்மை நன்று" (நாலடி.61)*

*"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்*

*திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்*

*மறுவாற்றும் **சான்றோரஃதாற்றார்** தெருமந்து*

தேய்வர் ஒருமா சுறின்" *(நாலடி.151)*

"நுண்ணுணர் வின்மை வறுமை, **அஃதுடைமை**

பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் - எண்ணுங்கால்

பெண்ணவாய் ஆணிழந்த பேடி யணியாளோ

கண்ணவாத் தக்க கலம்" *(நாலடி.251)*

"கடக்கருங் கானத்துக் காளைபின் நாளை

நடக்கவும் வல்லையோ என்றி – சுடர்த்தொடீஇ

பெற்றா னொருவன் பெருங்குதிரை அந்நிலையே

கற்றான் **அஃதூரும்** ஆறு" *(நாலடி.398)*

"கருமமு முட்படாப் போகமும் துவ்வாத்

தருமமும் தக்கார்க்கே செய்யா – ஒருநிலையே

முட்டின்றி மூன்று முடியுமேல் **அஃதென்ப**

பட்டினம் பெற்ற கலம்" *(நாலடி.250)*

அஃதறிவார் - அறியும் இயல்பினர், சான்றோரஃதாற்றார் - பொறுக்க மாட்டார், அஃதுடைமை – அந்த நுட்பமான அறிவுடைமை, அஃதூரும் - அப்பொழுதே அறிந்தவன், அஃதென்ப – அது போன்ற பொருள்களில் ஆய்தத்தை நாலடியார் கையாண்டுள்ளது,

**நான்மணிக்கடிகை**

நான்மணிக்கடிகை து – வை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

"மறை அறிப அந்தண் புலவர் முறையொடு

வென்றி அறிப அரசர்கள் என்றும்

வணங்கல் அணிகலம் சான்றோர்க்கு **அஃது** அன்றி

அணங்கல் வணங்கின்று பெண்" *(நான்.89)*

அஃது – அதுவன்றி என்ற பொருளில் நான்மணிக்கடிகை ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.

**ஆசாரக்கோவை**

ஆசாரக்கோவை து – வை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது

*"தமக்கு உற்ற கட்டுரையும் தம்மின் பெரியார்*
*உரைத்ததற்கு உற்ற உரையும் அஃது அன்றிப்*
*பிறர்க்கு உற்ற கட்டுரையும் சொல்லற்க சொல்லின்*
*வடுக் குற்றம் ஆகிவிடும்" (ஆசா.கோ.67)*

அஃது அன்றி - கணவனை அன்றி என்ற பொருளில் ஆசாரக்கோவை ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.

**பழமொழி நானூறு**

பழமொழி நானூறு தா, து, தே இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

*"தோற்றம் பெரிய நசையினார் அந்நசை*
*ஆற்றாதவரை அடைந்து ஒழுகல் ஆற்றின்*
*கயல் புரை உண்கண் கனங்குழாய் **அஃதால்***
*உயவுநெய்யுள் குளிக்குமாறு" (பழ.நா.163)*

*"ஈனுலகத்து ஆயின் இசை பெறூஉம் **அஃது** இறந்து*
*ஏனலகத்து ஆயின் இனிது அதூஉம் தான் ஒருவன்*
*நாள்வாயும் நல் அறம் செய்வாற்கு இரண்டு உலகும்*
*வேள் வாய் கவட்டை நெறி" (பழ.நா.6)*

*"திரியும் இடிஞ்சிலும் நெய்யும் சார்வு ஆக*
*எரியும் சுடர் ஓர் அனைத்தால் தெரியுங்கால்*
*சார்வு அறஒடிப் பிறப்பு அறுக்கும் **அஃதே**போல்*
*நீர்அற நிர்ச் சார்வு அறும்" (பழ.நா.219)*

பதிப்பு இணையம்

அஃதால் - அதனால், அஃது – அது, அஃதேபோல் - அதபோன்று போன்ற பொருள்களில் பழமொழிநானூறு ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.

**சிறுபஞ்சமூலம்**

சிறுபஞ்சமூலம் து – வை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

"கொண்டான் வழிஒழுகல் பெண் மகன் தந்தைக்குத்
தண்டான் வழி ஒழுகல் தன் கிளை அஃது அண்டாதே
வேல் வழிவெம் முனை வீழாது மன்நாடு
கோல்வழி வாழ்தல் குணம்" (சிறு.மூ.14)

அஃது – அவனைப்போல என்ற பொருளில் சிறுபஞ்சமூலம் ஆய்தத்தைக் கையாண்டுள்ளது.

முடிவாக

அறநூல்களில் குறிலை அடுத்து ஆய்த எழுத்து வரும்பொழுது பெரும்பான்மை அகரத்தை அடுத்தே வருகின்றது. ஆறு வல்லின எழுத்துகளுக்கும் முன்னர் வராமல் க, கா, கி, கு, சா, த, தா, தி, து, தூ, தெ, தே, தொ ஆகிய எழுத்துகளுக்கு முன்னர் மட்டுமே ஆய்தம் வருவதைக் காணமுடிகின்றது. அற நூல்கள் எல்லாவற்றிலும் ஆய்தம் பின்பற்றப்பட வில்லை. அகராதியில் சொல்லப்பட்டுள்ள சொற்களைக் காட்டிலும் வேறு சொற்களைக் கொண்டு அறநூல்கள் அமைந்துள்ளன. அறநூல்கள் ஒரு குறிப்பிட்ட ஆய்தச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பிட்ட பொருள்களின் அடிப்படையிலேயே வருகின்றன. பிற சொற்களைக் கையாளவில்லை. மக்கள் வழக்கத்தில் உள்ள சொற்களை மட்டுமே அறநூல்கள் கையாண்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

1. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.2003
2. சோம.இளவரசு, நன்னூல் எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.1992



பதிப்பு இலையம்

3. ஜெ.நாராயணசாமி, திருக்குறள், சுரா பதிப்பகம், சென்னை.*2011*

4. அ.மாணிக்கம், நாலடியார் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை *2010*

5. ம. இராசமாணிக்கம் பிள்ளை, பதினெண் கீழ்க்கணக்கு முன்றுறையரையனார் பழமொழிநானூறு, மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை.*2004*

6. ந.கந்தசாமி, தமிழிலக்கணச் செல்வம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், *2007*

7. ரம்போலாமாஸ்கரேனஸ், நல்ல தமிழ் எழுதுங்கள், கஸ்தூரி பதிப்பகம், திருச்சி.

8. தி.சங்குப் புலவர், மாணவர் தமிழிலக்கணம். திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.*1893*

9. எஸ்.கே.அருணாசலம், கல்லூரித் தமிழ் இலக்கணத் தெளிவு, செந்தமிழ் அச்சகம், சேலம் *1964*

10. ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்*2011*


பதிப்பு அல்லது